# தமிழரசு வட்டாரங்களில் அதிர்ச்சி

Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண்: 49

மலர் 9 இதழ் 90

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க சித்திரை 29 ஸபர் 1 வெள்ளிக்கிழமை [12-5-67]

## தலைவர்கள் அவசரமாக கூடவிருக்கின்றனர்

கொழும்பு, வியாழன்

மாவட்டசபை மசோதா உருவாகவே இல்லையென்ற தோரணையில் பிரதம மந்திரி பத்திரிகை நிருபர்களிடம் வெளியிட்டிருக்கும் கருத்து தமிழரசுக்கட்சி வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழரசுக்கட்சியின் தலைவர்கள் அவசரமாகக்கூடி பிரதமரின் கருத்துப்பற்றி ஆராயப் போவதாகவும் அதன்பிறகு கட்சி தொடர்ந்து தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதா இல்லையா என்பதுபற்றி தீர்மானிக்கப்படும் என்றும் தமிழரசுக் கட்சிப்பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இனியும் தமிழரசுக்கட்சி, இந்த அரசாங்கத்தில் தொடர்ந்தும் அங்கம்வகிப்பதில் அர்த்தமே இல்லையென்றும் தமிழரசுக்கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.



# "மாவட்டசபைமசோதா என ஒன்றுமே இல்லை



## தமிழரசுக்கட்சித் தலைவர்கள் ஆலோசனை கூறினர்கள்; உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை"

### பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் பிரதமர் விளக்கம்

கொழும்பு, வியாழன்

"மாவட்டசபைகள் மசோதா என் ஒன்று இல்லை. மாவட்டசபை அமைப்பதற்கான நகல் மசோதாகூட தயாரிக்கப்படவில்லை. தமிழரசுக் கட்சியினர் என்னுடன் பேச்சுவார்த்தை நடத்துகையில் மாவட்டசபைகள்பற்றி சில யோசனைகள் தெரிவித்தனர். அவை யோசனைகளாக இருக்கின்றனவேயன்றி அவற்றில் இதுவரை உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை." தேசிய அரசாங்கத்தின் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா இன்று நண்பகல் இந்த விபரத்தைத் தெரிவித்தார். இன்று நண்பகல் கூட்டிய பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் 'மாவட்டசபைகள்' 'இலங்கை—இந்திய ஒப்பந்த மசோதா' பற்றிய இரு விஷயங்களிலும் தமது நிலையைத் தெளிவுபடுத்திக் கூறினர்.

நிருபர்களின் மகாநாட்டில், "நான் சொல்வது உங்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கும்" என்று பிரதமர் தமது பேச்சை ஆரம்பித்து "மாவட்டசபை மசோதா என ஒன்று இல்லை" என்று கூறினர்.

மாவட்டசபைகள் அமைப்பதற்கான நகல் மசோதா கூட தயாரிக்கப்படவில்லை என்று பிரதமர் சொன்னர்.

"தமிழரசுக்கட்சித் தலைவர்கள் என்னுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது மாவட்டசபைகள் அமைப்பது பற்றி சில யோசனைகளைத் தெரிவித்தனர். அவை ஆலோசனைகள் தான். அவற்றை ஏற்றுக் கொள்ளவும் இல்லை; நிராகரிக்கவும் இல்லை" என்று பிரதமர் கூறினர்.

## இக்கூட்டத் தொடரில் மசோதாவராது

ஒரு நிருபரின் கேள்வியொன்றிற்குப் பிரதமர் பதிலளிக்கையில், "மாவட்ட சபைகள் அமைப்பதற்கான நகல்மசோதாவே தயாரிக்கப்படாதபோது பார்லிமெண்டின் இப்போதைய கூட்டத்தொடர் முடிவடைவதற்குள் மாவட்டசபை மசோதாவை எப்படிக் கொண்டுவர முடியும்? எப்படி நிறைவேற்றமுடியும்?" என்று கேட்டார். மாவட்ட சபைகளின் அமைப்பு முறை எப்படியிருக்கும் என்றும் அவற்றின் அதிகாரங்கள் என்ன என்றும் மற்றொரு நிருபர் கேட்டபோது, மசோதாவே தயாரிக்கப்படாதபோது அவை பற்றி இப்போது எப்படிச் சொல்ல முடியும்? மாவட்ட சபை மசோதா கொண்டு வரப்படுவதற்கு முன் பல நடவடிக்கைகள் படிப்படியாக எடுக்கப்படவேண்டும் என்றும் பிரதமர் கூறினர்.

"நாங்கள் ஏதோ திருட்டுத்தனமாக, ஒளிவுமறைவாக மாவட்ட சபைகளை அமைத்துக் கொடுத்து விடுவோமென்றும் அதற்காக நாம் ஏதோ இரகசியமாகச் செய்து கொண்டிருப்பதாகவும் எதிர்க்கட்சியினர் மக்கள் மத்தியில் தவருன அபிப்பிராயத்தை ஏற்படுத்த முயற்சிசெய்து வருகின்றனர். இதில் இரகசியம் எதுவும் இல்லை" என்று திரு. டட்லி சொன்னர்.

### சங்காபிஷேகம்

புன்னலைக்கட்டுவன், வியா.

ஊரெழு பர்வதவர்த்தினி அம்பாள் கோவிலில் சங்காபிஷேகமும், அன்னதானமும் நடைபெற்றன. 1008 சங்குகளால் அம்பாளுக்கு சிவஸ்ரீ.ச.பா. வைத்தியநாதக் குருக்களால் அபிஷேகம் செய்யப்பட்டது.

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியாழன்

தேசிய லொத்தர் சபையின் 141-வது சீட்டிழுப்பு இன்று மாலை நடைபெற்றது. பரிசு பெறும் டிக்கட்டுகள் வருமாறு:-

முதல் பரிசு

11 V 0812 ரூ. 88,000

2-வது பரிசு

12 E 0190 ரூ. 35,200

3-வது பரிசு

14 Q 0416 ரூ. 8,800

தலா ரூ. 440 பெறும் 100 டிக்கெட்டுகள் விபரம்:

| | |
|---|---|
| 26 S 0748 | 13 Q 0028 |
| 10 T 0778 | 11 Y 0639 |
| 11 T 0733 | 01 Y 0186 |
| 36 C 0205 | 25 K 0634 |
| 29 P 0047 | 35 B 0902 |
| 12 B 0209 | 36 X 0924 |
| 21 C 0350 | 10 E 0437 |
| 14 V 0143 | 18 U 0144 |
| 13 D 0874 | 07 K 0160 |
| 23 K 0828 | 11 Z 0091 |
| 17 D 0679 | 02 H 0366 |
| 04 B 0510 | 10 R 0383 |
| 01 V 0690 | 07 N 0716 |
| 21 K 0558 | 12 E 0819 |
| 21 E 0107 | 14 N 0275 |
| 27 G 0221 | 35 T 0770 |
| 14 V 0685 | 28 S 0116 |
| 22 L 0225 | 32 G 0742 |
| 31 R 0336 | 09 V 0641 |
| 33 D 0066 | 10 T 0040 |
| 11 M 0316 | 06 T 0340 |
| 14 X 0696 | 32 O 0825 |
| 19 V 0796 | 12 L 0227 |
| 22 L 0486 | 24 B 0289 |

[6-ம் பக்கம் பார்க்க]

## நாங்கள் கொடுப்பது குறைந்த அதிகாரம்

"மாவட்டசபை அமைப்பது' என்பது இன்று நாங்கள்தான் புதிதாகக் கூறிய விஷயமல்ல. திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் அரசாங்கம் நிகழ்த்திய இரண்டு சிம்மாசனப் பிரசங்கங்களிலும் பின்னர் அவர்கள் அமைத்துக்கொண்ட கூட்டரசாங்கத்தின் சிம்மாசனப் பிரசங்கங்களிலும் 'மாவட்டசபைகள் அமைக்கப்படும்'' என்று கூறப்பட்டிருந்தது. அந்த அரசாங்கங்கள், மாவட்ட சபைகள் தாங்களே சில சட்டங்களை இயற்றிக் கொள்ளக்கூடிய சுயநிர்ணய உரிமை உடையதாக இருப்பதற்கான அதிகாரங்களை வழங்க ஒப்புக்கொண்டிருந்தன. நாங்கள் கொடுக்க ஒப்புக்கொண்டுள்ள மாவட்டசபைகள் மத்தியஅரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலும் அதிகாரத்தின் கீழுமே இயங்கும். இந்த மாவட்டசபைகளுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்படமாட்டாது'' என்றும் திரு. டட்லி கூறினர்.

## 'கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசிப்பேன்'

"மாவட்டசபைகள் அமைப்பதற்கான நகல் மசோதா தயாரிக்கப்படுமுன் பலவிஷயங்களும் யோசிக்கப்படவேண்டும். மசோதா தயாரிக்கப்பட்டதும் தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இதர அரசியல் கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசனை செய்வேன். இதன் பின் அரசாங்கக் கட்சிக் கூட்டத்தில் மசோதாவைச் சமர்ப்பித்து அங்கத்தவர்களின் ஆலோசனைகளையும் அங்கீகாரத்தையும் பெறு

[6-ம் பக்கம் பார்க்க]

## மந்திரிசபை கூட்டம்

கொழும்பு, வியா.

மந்திரிசபை இன்று கூடி பார்லிமெண்ட் கூட்டத் தொடர் ஒத்திவைப்புபற்றி ஆலோசித்தது. ஆனல்முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

தேசியக்கல்விசீர்திருத்தம் பற்றியும் மந்திரிசபை ஆலோசித்ததாகத்தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நமக்கு வழி காட்ட வேண்டிய உண்மையான சட்டம் அன்புச் சட்டமே. பிறருக்குத் தீங்கு விளைவிக்கும் அநீதியான, சுயநலமான காரியங்களை நாம் செய்யவே கூடாது. அன்பு நமக்கு வழிகாட்டுமானால் அவ்விதம் எதுவும் செய்யமாட்டோம்.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

[illegible]lanadu Natioal Tamil Daily
[illegible]: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஞு [illegible]த்திரை மீ 29உ.(12-5-67)


## மலைநாட்டு தமிழர்

மலைநாட்டுப் பகுதியில் வாழும் இந்திய வம்சாவழி மக்களை வடக்கு கிழக்கு மாகாணங்களில் வந்து குடியேறும்படி உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் வேண்டுகோள் விடுத்து வரும் இதேசமயம் வடக்கிலும் கிழக்கிலும் ஏற்கனவே குடியேறி வாழ்ந்துவரும் இந்திய வம்சாவழியினருக்குத் தொடர்ந்து தொல்லைகள் இருந்துவருவது அவரது 'அழைப்பை' அர்த்தமற்றதாக்குவதுடன் அவரது 'அழைப்பின்' மதிப்பையும் குறைப்பதாகும்.

கிளிநொச்சியில் வாழ்ந்துவரும் இந்திய வம்சாவழியினர் பத்துப்பேர் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தின்மீது சமீபத்தில் கைது செய்யப்பட்டனர் என்றசெய்திஇங்குவாழும் இந்திய வம்சா வழியினரின் நிலைக்கு ஓர் உதாரணம். சட்ட விரோதக் குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தின்மீது நள்ளிரவில்கூட பொலிசார் வீடு புகுந்து, வீட்டுக்காரரைக் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசென்று அடைத்து வைப்பதும், பங்கீட்டரிசிப்புத்தகம் மற்றும் அத்தாட்சிகள் காட்டினாலும் அதை ஏற்றுக்கொள்ளாது துன்புறுத்துவதும் இங்கு அடிக்கடி நடைபெறும் சம்பவங்கள். இது பலரும் அறிந்த உண்மை. சட்ட விரோதக் குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தின்மீது ஒருதடவை கைதுசெய்யப்பட்டு தகுந்த அத்தாட்சி காட்டி விடுதலை பெற்ற சில தினங்களுக்குள்ளேயே மீண்டும் கைது செய்யப்படும் சம்பவங்களும் இங்கு நடைபெறுவதுண்டு. பங்கீட்டரிசிப் புத்தகம் உள்ளவர்களைக் கைதுசெய்யக்கூடாதென ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தும் அதை பொலிசார் மதிப்பதாகத் தெரியவில்லை. பங்கீட்டரிசிப் புத்தகம் உள்ளவர்களையும், ஒருதடவை கைது செய்து விடுதலை செய்தபின் மீண்டும் கைதுசெய்யப்படுவதற்கும் காரணமென்ன? இதில் லஞ்சஊழல்மோசடி இருப்பதாக கூறப்படும் புகார் பற்றி விசாரணை செய்யவேண்டியது அவசியம்.

இது ஒருபுறமிருக்க வடக்குகிழக்கு மாகாணங்களில் வாழும் இந்திய வம்சா வழியினருக்கு அடிக்கடி ஏற்படும் இத்தொல்லையை ஒழிப்பதற்கு அமைச்சர் திருச்செல்வம் உறுதியான நடவடிக்கை எடுத்தாரானல் இங்குள்ளவர்களின் அச்சம் நீங்கும், மலைநாட்டுதமிழ்மக்களின் அச்சமும் ஐயமும்நீங்கிஇங்கு வந்து குடியேறவும் முன்வருவர்.

வடக்கு கிழக்குமாகாணங்களில் விவசாயச் செய்கைக்கு இன்னும் நிறைய வாய்ப்பிருக்கிறது. திரு. வி. கே. வெள்ளையன் கூறுவது போல்மலைநாட்டுத் தமிழர்களுக்கு வடக்குக்கிழக்கு மாகாணங்களில் வேலை வாய்ப்புஅளிக்கவசதிசெய்யப்படவும் வேண்டும். மலைநாட்டுமக்களைப்பற்றி வடக்குகிழக்கு மாகாணத்தவர் பலர் இதுவரை கொண்டிருந்தமனப்பான்மையைமாற்றிக் கொள்ள வேண்டுமென்றும் திரு. வெள்ளையன் கூறுகிருர். அது உண்மைதான். மலைநாட்டுமக்கள் இப்பகுதிகளுக்கு வந்து நிம்மதியாக வாழமுடியுமாயின், இப்பகுதியின் செல்வம் அதிகரித்து நாட்டின் [illegible] பிரச்னையும் பெருமளவு நீங்குவதாக இருக்கும்.

# 'எந்தப் பதவியையும் நாடி நான் சென்றதில்லை

## மனித குல சேவையே நல்வாழ்வின் அம்சம்''

### டாக்டர் ஹுசேன் பேட்டி

புதுடில்லி, மே11

புதிதாக இந்திய ராஷ்டிரபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டாக்டர் சாகீர் ஹுசேன், இந்தியன் எக்ஸ்பிரஸ் சேவையைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஒருவர் பேட்டி கண்டு வெளியிட்டுள்ள சில விபரங்களை இங்கே தருகிருேம்.

கேள்வி-தாங்கள் முன்னர் உப ஜனதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, என்னைத் தேர்ந்தெடுத்தவர்களுக்கு ஏமாற்றமோ அபகீர்த்தியோ அளிக்காதிருக்க வேண்டுமென்ற நம்பிக்கையுடன், பணிவுடனும் பிரார்த்தனையுடனும் புதிய பதவியை ஏற்றுக் கொள்வதாக'' கூறியிருந்தீர்கள். இப்போது என்ன உணர்கிறீர்கள்?

டாக்டர் ஹுசேன்-

அதே மாதிரித்தான் அதையே நான் அதே வார்த்தைகளில் இப்பொழுதும் கூறலாம். நான் எனது வாழ்க்கையிலேயே எந்தப் புதிய பதவியையும் நாடியதில்லை. அதன் கவர்ச்சி எனக்குக் கிடையாது. நான் எனது வாழ்க்கையைப்பற்றி எந்த முடிவையும் எடுத்ததில்லை. பண்டிட்ஜீயும், மௌலானு ஆஸாத்தும் விரும்பியபடியாற்தான் நான் ஜாமிலாவிலிருந்து அலிகாருக்குச் சென்றேன். அலிகாரில் இரண்டு தவணைகள் கடமையாற்றினேன். எட்டு வருடங்கள் முடிந்தபின், சுகவீனம் காரணமாக ராஜினமா செய்தேன். எனக்கு ஒக்லாவில் ஒரு சிறியவீடு இருக்கிறது. இடம் எடுப்பதில் எனக்குக் கஷ்டம் இருந்திருக்காது.

கே- கடந்த 5 வருடங்கள் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

டாக்டர் ஹுசேன்-

அவை குறிப்பிடத்தக்க சம்பவங்கள் நிறைந்த, கவலையான வருடங்கள்....சீனவும், பாகிஸ்தானும் படையெடுத்தன. இரு பேரன்புக்குரிய பிரதமர்கள் ஒருவர்பின் ஒருவராகக் காலமாகினர். நம்பிக்கைக்குரிய சில அறிகுறிகள் இருக்கின்றன. ஆனுலும் கவலை தரும் காரணங்களும் உண்டு. எங்கள் பல்கலைக்கழகங்கள் கட்டு மீறிவிட்டன. ஒழுங்கீனம் அங்கு நிலவுகிறது. சமுகம் ஜனநாயக முறையில் இயங்குவதற்கான குறிப்பிட்ட சில அம்சங்களை நாம் சில சமயங்களில் தவறவிட்டுவிடுகிருேம். ஆனுல் இந்நாட்டில் ஜனநாயகம் வயது அடைந்து விட்டது, நெஞ்சை நிறைக்கும் அனுபவமாகும். வாக்குப்பெட்டி மூலம் அரசாங்கத்தை மாற்ற முடியுமென்பது ஒரு பெரிய சாதனையாகும்.

கே:புதியஜனதிபதித்தேர்தலுக்காக அண்மையில் நடைபெற்ற பிரச்சாரத்தில் உங்களுக்கெதிராகச் சிலகுற்றச் சாட்டுகள் தெரிவிக்கப்பட்டன. அதைப் பற்றி எவ்வாறு உணர்ந்தீர்கள்? இக்குற்றச்சாட்டுகளுக்கு பதிலை நான் கேட்கவில்லை. அவற்றின் பிரதிபலிப்பைத் தான் கேட்கிறேன். உயர்ந்த மதிப்புக்குரிய ஒருவர் இவ்விதகுற்றச் சாட்டுகள் தமக்கெதிராகச் செய்யப்படும் போது, தமக்குள் எவ்விதம் உணர்கிருர் என்பதையே அறிய விரும்புகிறேன்.

டாக்டர் ஹுசேன்:

என்னை அது துக்கம் அடையச் செய்தது. அது என்னைத் தொந்தரவு படுத்த வில்லை. இத்தொடர்பில் நான் எப்போதாவது கோபமடைந்ததாக எனக்குத் தெரியவில்லை. ஆனுல் நான் மிகவும் மனவருத்தமடைந்தேன்.

கே: நல்ல அரசாங்கத்தின் குணதிசயங்கள் பற்றிக் கூறுவீர்களா?

டாக்டர் ஹுசேன்: அது விரிவான ஒரு விஷயம். அதைப்பற்றி இப்பொழுது பேச நான் விரும்பவில்லை.

கே: நல்ல வாழ்க்கையின் குணங்கள்?

டாக்டர் ஹுசேன்: வாழ்க்கையில் அதிக அளவு திருப்தயளிக்கக் கூடியது, மனிதகுலத்துக்குச் சேவை செய்வதேயாகும். சின்னத்தனமான காரியம் எதையும் செய்யமாட்டேனென்ற தன்னம்பிக்கை வேண்டும். இது தான் நல்ல வாழ்க்கையைப் பற்றி நான் கொண்டுள்ள கருத்து.

[5-ம் கலத் தொடர்ச்சி]

புகைத்தல், புலால் உண்ணல் இவை மட்டுமன்றி, காப்பி, டீ குடிப்பதையும் இப்போது நிறுத்தி, தம்மை இப்பதவிக்கு தகுதியாக்கிக் கொண்டுவருவதாகத் தெரிவித்திருக்கிருர்.

## அபராதம

சாவகச்சேரி, வியாழன்

யாழ்ப்பாணம்-கண்டி வீதியில் கவலையீனமாக பஸ்ஸைச் செலுத்தி கொடதெனியா அப்போதிக்கரியான திரு. எம். இராமலிங்கம் என்பவருடைய காரில் மோதி நஷ்டம் ஏற்படுத்தியதாகவும், அதே நேரத்தில் திரு. எம். இராமலிங்கத்திற்குக் காயம் விளைவித்ததாகவும் முல்லைத்தீவு இ.போ.ச. டிப்போ பஸ் சாரதியான எஸ். கந்தசாமி என்பவர் மீது குற்றஞ் சாட்டிப் பளைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. என். ஜினசேனவினல் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட மாஜிஸ்திரேட் 175 ரூபா அபராதம் விதித்தார்.

## தாச்சிப்போட்டி

அளவெட்டி, வியாழன்

இணுவில் அண்ணு கழகத்துக்கும் அளவெட்டி சென்ரல் கிளப்பிற்கும் அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோவில் வீதியில் நடந்த தாச்சிப் போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா 6 பழங்கள் பெற்றன. ஆட்டம் முடிய 10 நிமிடங்களிருந்தும் தொடர்ந்து விளையாட மறுத்து அண்ணுகழகம் [illegible] சென்ரல் கிளப்பிற்கே வெற்றி என அறிவிக்கப்பட்டது.

## தியத்தலாவையில் பயிற்சி

புன்னலைக்கட்டுவன், வியா.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த முப்பது ''கடற்ஸ்'' தியத்தலாவைக்குச் சென்று துப்பாக்கி சுடும் பயிற்சி பெற்றுத் திரும்பினர். ஆசிரியர் திரு. எஸ். பாலேந்திரன்தலைமையில் இக் கோஷ்டி சென்றது.

## புதிய அலுவலகம்

புன்னலைக்கட்டுவன், வியா.

வலிகாமம் கிழக்கு ஆசிரியர் சங்கத்துக்கான ஒரு புதிய அலுவலகத்தை அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர் ஸி. ஸ்ரீநிவாசன் நீர்வேலியில்திறந்துவைத்தார். ஆசிரியரின் கலந்துரையாடல், பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றுக்கான இவ் வலுவலகத்தில்ஒரு வாசிகசாலையும் இடம்பெறும்.

## இன்று

வண்ணை வைத்தீஸ்வர சுவாமி ஆலயத்தில் மாலை 6மணி முதல்7மணி வரை சமயச் சொற்பணியும் 7 மணிக்கு ஸ்ரீராஜராஜேஸ்வரி உற்சவமும் நடைபெறுகின்றது. பின்னர் ஞானசம்பந்த ஆதீன மாணவிகளது திருப்புகழ் இன்னிசையும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளது கதாகாலக்ஷேபமும் நடைபெறும்,

தமிழகத்திலேசைவ ஸ்தாபனங்கள் மட்டுமே அரசாங்க ஆதிக்கத்துக்குள் இருப்பதாயும், வைஷ்ணவ ஸ்தாபனங்கள் கூட சேரவில்லையென்றும் எழுதியிருந்தேனல்லவா? வைஷ்ணவ ஸ்தாபனங்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன வென்றும் அவை தெய்வீகப் பேரவையில் தான் சேரவில்லையென்றும்அறிகிறேன். இந்து தர்ம ஸ்தாபனங்களுக்கு அரசாங்க ஆதிக்கத்திலிருந்து எப்போது விடுதலை கிடைக்குமோ? சமயச் சார்பற்ற ஓர் அரசாங்கம் ஏன் இந்து தர்மங்களில் மட்டும் தலையிடவேண்டும்?

ஃ ஃ

பின்னை நம்பும் புயத்தான்
நெடுமாலும், பிரமனும்
என்றிவர் நாடியுங்காண,
உன்னை நம்பி ஒருவர்க்கெய்தலாமே, உலகு நம்பி உரை
செய்யு மதல்லால், முன்னை
நம்பி பின்னும் வார் சடை
நம்பி, முழுதிவை இத்தனை
யுந் தொகுத்தாண்ட,
தென்னை நம்பி எம் பிரானுய
நம்பி, எழுபிறப்பு மெங்கள்
நம்பி கண்டாயே.

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்

[நப்பின்னை என்பவள் விரும்புகின்ற தோள்களை உடையவனுகிய நீண்ட உருவத்தை உடைய திருமாலும், பிரமனும் தேடியும் காணமாட்டாத நம்பியே, உலகுக்கு ஒருவனுசிய நம்பியே, உன்னை வாழ்த்துதலாகிய அதுவன்றி, அணுகுதல் ஒருவர்க்கு இயல்வதோ! எல்லாப் பொருட்கும் முன்னே உள்ள நம்பியே, பின்னிய நீண்ட சடையையுடைய நம்பியே, உன் இயல்பெல்லாம் இவை போல்வனவே, ஆயினும் இத்தனையையும் தோன்றுவாறு அடக்கி, பெரு நம்பியாகிய நீ எளிவந்து என்னை ஆண்டது என்னையோ? எமக்குப் பெருமானுகியநம்பியே, நீயே எங்கட்கு எப்பிறப்பிலும் தலைவன்.]

# ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணம் நயினுதீவில் தோன்றிய பெரியார் கே. இராமச்சந்திரா அவர்கள் இப்போது சர்வதேசப் புகழ் பெற்று வருகிருர். 'ரிலிஜியஸ் டைஜஸ்ட்' என்ற ஆங்கில சமய மஞ்சரிக்கும், 'ஆத்மஜோதி'க்கும் ஆசிரியரான அவர், சென்ற சில வருடங்களில், ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா, ஹாலந்து முதலிய பல நாடுகளுக்கும் அழைப்பின் மீது சென்று தமிழிலுள்ள சமயச் செல்வங்களை வெளிநாட்டாருக்கு வாரி வழங்கி வருகின்ருர். மீண்டும் அவரை அமெரிக்காவுக்கு வருமாறு அழைப்பு வந்துள்ளதாகவும் சீக்கிரத்தில் அவர் செல்லலாமென்றும் அறிகிறேன். அவரது எழுபதாவது ஜயந்திவிழா கொழும்பில் நடந்தபோது, அவர் சமய விஷயமாக ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரைகள் ஒரு விசேஷ மலராக வெளியிடப்பெற்றன. தமிழிலே அவர் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து ஒரு விசேஷ மலரைத் தயாரித்துவருவதாகவும் அதன் வெளியீட்டுவிழாவை யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரவித்தியாலயத்தில் சிறப்பாகக் கொண்டாடுவதென்றும் ஒரு கூட்டத்தில் தீர்மானித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உதித்த இப் பெரியாரை, கொழும்பு மட்டுமன்றி வெளிநாடுகளும் போற்றி கௌரவிக்கின்றன. ஆனுல் இதுவரை அவருக்கு ஒரு பாராட்டு விழாவை இங்கு நடத்தவில்லை. இது ஒரு பெரிய குறை. தாமதித்தாவது இக் கடமையைச்செய்ய முன்வந்துள்ளது வரவேற்கத்தக்கது.

யாழ்ப்பாணத்துக்கு அவர் செய்துள்ள மற்ருேர் உபகாரம், இரு தவப்புதல்வர்களின் மேலான சேவை நமக்குக் கிடைக்கச்செய்துள்ளதாகும். புகழ்பெற்ற கண் நிபுணரான டாக்டர் பரராஜசேகரமும், இளம் பொலிஸ் அதிபரான சுந்தரலிங்கமும் இவரது புதல்வர்களாவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஃ ஃ ஃ

சைவ சித்தாந்தச் செல்வரான வஜ்ரவேலு முதலியார் அவர்கள், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஆதரவில் யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மண்டபத்தில் சித்தாந்த வகுப்புகளை இப்போது நடத்திவருகின்ருர். வடமாகாண கல்வி அதிபரான ஸ்ரீமதி நவரத்தினமவர்கள் வகுப்பை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் முதலியார் அவர்களை காஞ்சிபுரத்திலே அவர் கல்லூரி அதிபராக இருக்கையில் அங்கு முதல் முதல் சந்தித்ததைப்பற்றிக் கூறி, அவரது பெரும் புலமையையும், எளிமையையும் பாராட்டினர்.

வகுப்புக்கு இருபது பேராவது வருவரோ என்று நினைத்தேன். முதல்நாளே நூற்றைம்பது பேருக்குமேல் ஆண்களும் பெண்களுமாக வந்திருந்து மிக ஊக்கத்துடன் கேட்டனர். அவரைவிட வயதில் மூத்தவர் சிலரும் வந்து பாடம் கேட்டனர். சைவசமயபாடம் போதிக்கும் ஆசிரியர்மார்களுக்கு இது நல்லதோர் அரிய சந்தர்ப்பமாகும்.

ஃ ஃ ஃ

ஆந்திர ராஜ்யத்திலே இந்து தர்ம பரிபாலன இலாகாவைப் பொறுப்பேற்ற புதிய அமைச்சர்,

[4-ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'நாட்டின் பிரச்னைகளை காங்கிரஸ் தீர்க்கும்'
# திருமதி இந்திரா நம்பிக்கை

புதுடில்லி, மே. 11

**நாட்டின பொருளாதார, உணவுப் பிரச்னைகளைக் காங்கிரஸ் கட்சி தீர்க்கும் என்பதில தமக்கு நம்பிக்கை உள்ளதாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இங்கு கூறினர்.**

**அந்நியநாட்டுப் பத்திரிகையாளர் சங்கத்தின் கூட்டமொன்றில் பேசுகையிலேயே திருமதி இந்திராகாந்தி இந்த நம்பிக்கையைத் தெரிவித்தார்.**

இந்தியாவில் நிலவும் பொருளாதார, உணவுப் பிரச்னைகள் அளவுக்கு அதிகமாகப் பத்திரிகைகளில் பெரிதுபடுத்திக் காட்டப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டை நோக்கியுள்ள பிரச்னைகளை நாட்டு மக்கள் சமாளிப்பர் என்பதில் தனக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருப்பதாகவும், இந்த நம்பிக்கையானது இந்தியமக்களின் குணவியல்பை அனுபவமூலம் அறிந்துள்ளதால் மக்கு ஏற்பட்டுள்ளதாகவும் பிரதமர் இந்திராகாந்தி தெரிவித்தார்.

### ஜனநாயக சோஷலிஸம்

இந்தியாவும், ஜனநாயக சோஷலிசமும்பற்றி நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில், ஜனநாயக சோஷலிச பாதையில் இந்தியா கடந்த 20 ஆண்டுகளில் பெருமளவு முன்னேறி விட்டதாகப் பதிலளித்தார்.

மத்திய அரசாங்கத்துக்கும், ராஜ்ய அரசாங்கங்களுக்குமிடையேயுள்ளதொடர்புகள்பற்றிப் பிரதமரிடம் கேட்கப்பட்டபோது, ராஜ்ய முதல்மந்திரிகள் பெரும்பாலும் ஒத்துழைக்கும் மனப்பான்மையையே காட்டி வந்துள்ளதாக அவர் பதில் கூறினர். என்றாலும் பல்வேறு இனங்களைக்கொண்ட பெரிய நாடான இந்தியாவில், மத்திய—ராஜ்ய அரசாங்கங்களுக்கிடையே ஓரளவு நெருக்கடி நிலவுவதைத் தவிர்க்கமுடியாதென்றும் அவர் கூறினர்.

### கூட்டரசாங்கம் இல்லை

பிறகட்சிகளுடன் சேர்ந்து ராஜ்யங்களில் கூட்டரசாங்கம் அமைப்பதற்கு காங்கிரஸ் சம்மதிக்காது எனப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் திட்டவட்டமாகக் கூறினர். காங்கிரஸ் பெரும்பான்மைக் கட்சியாகவுள்ள ராஜ்யங்களிலும்கூட, காங்கிரஸ் கூட்டரசாங்கம் அமைக்கும் முயற்சியில் இறங்காது என்றார் அவர். வேறுபட்ட இலட்சியங்களுடைய பிற கட்சிகளுடன் காங்கிரஸ் கூட்டுச்சேர முடியாதுஎன்று அவர் கருத்துத் தெரிவித்தார்.

நடந்துமுடிந்த பொதுத் தேர்தல் முடிவுகள்பற்றிக் குறிப்பிடுகையில், மக்களின் நிலையற்ற தன்மையைஅவை காட்டுகின்றன என்பது பொருத்தமல்லவென்றும், உண்மையிலே அதற்கு மாறாக, மக்களின் உறுதியானநிலையையே அம்முடிவுகள் தெரிவிப்பதாகவும் பிரதமர் கூறினர்.

### பாகிஸ்தான்

பாகிஸ்தானுடன் இந்தியாவின் உறவுபற்றிப் பிரதமர் பேசுகையில், பாகிஸ்தானுடன் எந்த விஷயத்தையிட்டும்பேசுவதற்கு இந்தியா தயாராகவிருப்பதாகக்குறிப்பிட்டார். ஆனல்காஷ்மீர்பற்றிப்பேசுவதற்கெதுவுமில்லை என்றார். அவர் பாகிஸ்தானுடன் சினேக பூர்வமான உறவுமுறையையே இந்தியா எப்பொழுதும் விரும்புவதாகவும் திருமதி இந்திரா காந்தி மேலும் தெரிவித்தார்.

## முன்னாள்பிரதமர் மகன் கைது

அதென்ஸ், மே 11

முன்னாள் கிரேக்கப் பிரதமரான திரு. ஜோர்ஜ் பப்பாந்திரியோவின்மகனான ஆந்த்ரே பப்பாந்திரியோ, கிரேக்க ராஜ்யத்தைக் கவிழ்க்கச் சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். இவர் சில இராணுவ அதிகாரிகளுடன் சதியாலோசனை நடாத்தியதாகக் கூறப்படுகிறது.

## வியட்னும் விசாரணை முடிவடைந்தது

ஸ்டோக்ஹோம், மே 11

வியட்னும் போர் மீதான பேட்ராண்ட் ரசல் பிரபுவின் தலைமையில் நடைபெற்ற விசாரணைச் சபை தனது விசாரணையை இங்கு முடித்துக்கொண்டது.

வியட்னமில் அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்தும் வியட்னும் சிவிலியன் பகுதிகளில் அமெரிக்கா குண்டு வீசுவதைக் கண்டித்தும் விசாரணைச்சபை தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

## இடமாற்றம்

சுழிபுரம், வியாழன்

மூளாய் தேவாலயத்தில் கடமையாற்றிய பாதிரியார் திரு. ஜே. எம். மார்க்கண்டு இம்மாதம் தொடக்கம் சங்கானை தேவாலயத்துக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## அமெரிக்க கப்பலுடன் ரஷ்ய கப்பல் மோதியது

வாஷிங்டன், மே 11

ஜப்பான் கடலில் ரஷ்யாவின் நாசகாரக் கப்பலொன்றும், அமெரிக்க நாசகார கப்பலொன்றும் ஒன்ருேடொன்று மோதிக்கொண்ட சம்பவமொன்றையிட்டு அமெரிக்கா ரஷ்யாவிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

ரஷ்ய கப்பலை அருகே நெருங்கவேண்டாம் என அமெரிக்க கப்பல் பலமுறை எச்சரித்தபோதும், அதைப் பொருட்படுத்தாது. ரஷ்ய கப்பல் வந்துகொண்டிருந்தமையினலேயே மோதல் ஏற்பட்டதென அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

இரண்டு கப்பல்களுக்கும் எவ்வித சேதமும் ஏற்படவில்லை.

## ஐரோப்பிய பொதுச் சந்தையில் சேர பிரிட்டன் விண்ணப்பம்
### பார்லிமெண்ட் அங்கீகரித்தது

லண்டன், மே 11

ஐரோப்பிய பொதுச்சந்தையில் சேர விண்ணப்பிப்பதென்ற பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முடிவை பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அங்கீகரித்துள்ளது.

தீர்மானத்துக்குச் சாதகமாக 488 வாக்குகளும், எதிராக 62 வாக்குகளும் கிடைத்தன. வாக்கெடுப்பு பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் நடைபெற்றது.

விரைவிலேயே காமன்வெல்த் முடிவடைந்துவிடுமென்றும், பிரசல்ஸ், பொன் அல்லது பாரிசுடன் பிரிட்டன் முடிச்சுப்போடப்பட்டுவிடுமென்றும் தீர்மானத்தை எதிர்த்துப்பேசிய சின்வெல் பிரபு கூறினர்.

## விமானங்கள் ஐந்து சுடப்பட்டன

சைகோன், மே 11

ஐந்து அமெரிக்க விமானங்கள் வட வியட்னுமில் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ஹனேய் ரேடியோ அறிவித்துள்ளது அத்துடன், 17-வது அட்சரேகைக்கு வடக்கே அமெரிக்கர்கள் துண்டுவெடிக்கும் குண்டுகளை வீசியதாகக் குற்றம் சாட்டியுள்ளது.

## வள்ளுவர் மலர்

சுழிபுரம், வியாழன்

வழக்கம்பரை சனசமூக நிலையத்தினர் வள்ளுவர் விழா மலர் ஒன்று வெளியிடுவதற்கு ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளனர். தமிழ் மறைக் கழகத்தினர் இவ்வாண்டு சங்கானையில் வள்ளுவர் விழாவைக் கொண்டாட விருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது

## பிரயாணிகள் மகஜர்

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் பஸ் பிரயாணிகள் சங்கத்தின் சார்பில் சங்கத்தலைவர் திரு. சு. கந்தசுவாமி சாவகச்சேரி, மூளாய் பஸ் சேவை விஸ்தரிப்பு சம்பந்தமாக சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினத்துக்கு ஒரு மகஜரை அனுப்பியுள்ளார். இ. போ. ச. மேனஜிகாரிகளுடன் தொடர்பு கொண்டு சங்கானை வரை வரும் பஸ் வண்டியை மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை வரை விட ஒழுங்கு செய்யுமாறு அவர் தமது கடிதத்தில் கேட்டுள்ளார்.

## பிரிட்டிஷ் பிரதமரின் பேச்சில் சக்ளா அதிருப்தி

கோலாலம்பூர், மே. 11

சிங்கப்பூரிலிருந்து தமது விஜயத்தை முடித்துக் கொண்டு, இந்திய வெளியுறவுமந்திரி திரு. சக்ளா, இன்று மலேஷியாவுக்கு வந்துசேர்ந்தார்.

மலேஷியாவுக்கும், இந்தியாவுக்கும் எவ்வித பிரச்னைகளும் கிடையாதென்று திரு. சக்ளா இன்று தெரிவித்தார். மலேஷியாவுடன் பொருளாதார உடன்படிக்கை செய்யும் நோக்கமாகவே தாம் வந்துள்ளதாகவும் அவர் கூறினர்.

சிங்கப்பூரிலிருந்து மலேஷியாவுக்குப் புறப்படுமுன்னர், சிங்கப்பூர் விமானநிலையத்தில் பத்திரிகையாளர்களுடன் திரு. சக்ளா உரையாடினர். அப்போது, தென்கிழக்காசியாவில் சீன தனது பலத்தை விஸ்தரிக்க முயற்சிப்பதுபற்றிக் குறிப்பிட்டு, அந்த ஆபத்தை முறியடிக்க தென்கிழக்காசிய நாடுகள் தமது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவேண்டுமென்றார் அவர்.

### பாகிஸ்தானும ரஷ்யாவும

ரஷ்யாவிடமிருந்து பாகிஸ்தான் ஆயுதங்கள் பெற முயற்சிப்பது பற்றிக் கேட்கப்பட்ட போது, அப்படி ரஷ்யா ஆயுதமளித்தால், புதிய ஆயுதப்பந்தயத்தையே இப்பகுதியில் அது ஆரம்பித்து வைக்குமென திரு. சக்ளா கூறினர். [illegible]

அளிக்குமென்பதில் தமக்கு நம்பிக்கை யில்லையெனவும், தென்கிழக்காசியாவில் சமாதானம் நிலவ வேண்டுமென்பதே ரஷ்யாவின் நோக்கமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

### பிரிட்டனும ஐரோப்பிய சந்தையும

பிரிட்டன் ஐரோப்பிய பொதுச்சந்தையில் சேருவது பற்றி இந்திய வெளியுறவு மந்திரி குறிப்பிடுகையில், அப்படிச் சேருவதன் மூலம் காமன்வெல்த்திலுள்ள ஆசிய நாடுகளின் நலன்களை பிரிட்டன் புறக்கணித்து விடாது பார்த்துக் கொள்ள வேண்டுமெனக் கூறினர்.

ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேருவது பற்றி அண்மையில் பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் பேசிய பேச்சு தமக்கு அதிருப்தியையும், துக்கத்தையும் அளித்துள்ளதாக திரு. சக்ளா தெரிவித்தார். அப்பேச்சில் பிரதமர் வில்சன், காமன்வெல்த் நாடுகளான அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து பற்றியே குறிப்பிட்டுள்ளாரெனவும், ஆசிய அங்கத்துவநாடுகள் பற்றி எதுவுமே அவர் கூறவில்லையென்றும் திரு. சக்ளா கூறினர். காமன்வெல்த்தில் ஆசிய நாடுகளும் அங்கம் வகிப்பது பிரிட்டனுக்குத் தெரியவில்லைபோலும் என்றார் அவர்.

## விவசாயப் பிரசாரம்

சுழிபுரம், வியாழன்

குடியேற்றத் திட்டங்களில் விவசாயத்தில் ஈடுபட்டு நாட்டுக்கும் தமக்கும் உழைக்கமக்களைத் தூண்டுமுகமாக கூட்டு அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் தலைமையில் ஒரு பிரசாரக் கூட்டம் பண்டத்தரிப்பில்நடைபெற்றது. இக் கூட்டத்தில் காரியாதிகாரி மாணிக்கநடராசா, கி. ஜேம்ஸ் ஆகியோர்பேசினர்.

## 'மின்சாரம் வழங்குக'

சுழிபுரம், வியாழன்

சித்தன்கேணிப் பகுதி மக்கள் தங்களுக்கு விரைவாக மின்சாரம் பெற்றுத் தரவேண்டும் என சுழிபுரம் கிராமசபையினரை வேண்டியுள்ளனர். சித்தன்கேணிக் கிராமத்தின் ஒரு பகுதி வட்டுக்கோட்டைக் கிராமசபையுடனும் மறு பகுதி சுழிபுரம் கிராமசபையுடனும் இயங்குகின்றன வட்டுக்கோட்டைக் கிராமசபைப் பிரிவினர் மின்சாரம் வழங்குவதில் துரித ஏற்பாடுகளை கவனித்து வருகின்றனர்.

சுழிபுரம், செவ்.

சுழிபுரம் திருவடிநிலைக் கரையோரத்தில் [illegible] களவு அதிகரித்துவருகிறது.

## உலகை நோக்கும் பெரிய நெருக்கடி வியட்னும்
### — யு தாண்ட்

ஐ.நா.(நியூயோர்க், மே. 12

''வியட்னுமிலேயே உலகம், இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர், மிகவும் நெருக்கடியான நிலையை எதிர்நோக்கியுள்ளது'' என்று ஐ. நா. தலைமைக்காரியதரிசி யு தாண்ட் ஐ. நா. தலைமைக்காரியாலயத்தில் வரவேற்பு விருந்துபசாரத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அமெரிக்கா, வடவியட்னும் மீது குண்டு வீசுவதை நிறுத்த வேண்டுமெனவும், அப்படி நிறுத்தினல் சமாதானப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள வடவியட்னும் சம்மதம் தெரிவிக்குமெனவும் யு தாண்ட் கூறினர்.

## பழிக்குப் பழி

ஜோர்டான், மே 12

இரு சிரியா நாட்டுத் தூதுவர்களை சவுதி அரேபியா விரும்பத்தகாதவர்கள் எனப் பிரகடனப்படுத்தி 24 மணித்தியாலத்தில் சவுதி அரேபியாவை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ளது. சென்ற வாரம் டமாஸ்கஸிலிருந்து இரண்டு சவுதி அரேபிய தூதுவர்களை சிரியா வெளியேற்றியதைத் தொடர்ந்தே சவுதி அரேபியா இப்பதில் நடவடிக்கையை எடுத்துள்ளதாகத் தெரிகிறது.

## ஈராக்கில் புதிய அரசாங்கம்

பாக்தாத், மே 11

ஈராக்கில் ஜனதிபதிஆரிப்பின் புதிய அரசாங்கம் பதவியேற்றுள்ளது. ஜனதிபதி ஆரிப்பே ஈராக்கின் புதிய பிரதமருமாவார். ஜனதிபதியையே நாட்டின் பிரதமராக்கும் வகையில் ஈராக்கின் அரசியற் சட்டம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. ஈராக்கின் பிரதமராகவிருந்த ஜெனரல் தாலிப் சென்ற வாரம் தமது மந்திரிசபையின் [illegible]வைச் சமர்ப்பித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி விடுகின்றனர்.



அடுத்து உங்கள் முறை ஆகலாம்

50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்

அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர் உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.

142




உங்கள் அடுத்த பெரிய சீட்டிழுப்பு
1967 மே 18-ந் திகதி 142-வது சீட்டிழுப்பு பசறையில் நடைபெறும்.

1-வது பரிசு ரூ. 100,000/- அல்லது பேர்ஜே 404 ஸ்டேசன் வாகனும் ரூ. 80,750/-ம் X



2-வது பரிசு ரூ. 40,000/- அல்லது பேர்ஜே 404 காரும் ரொக்கம் ரூ. 22,050-ம் X



3-வது பரிசு ரூ. 10,000/- அல்லது புத்தம் புதிய போர்ட் ட்ராக்டர் [கம்பெனி பட்டியலில் கண்டுள்ளவிலை ரூ. 14,000/-மாக குறிப்பிடப்பட்டிருக்கும் இந்த ட்ராக்டரை மெஸர்ஸ் சத்தியா வதி ஸ்டோரார்ஸ் & மோட்டார் ட்ரான்ஸ்போட் லிமிட்டெட் ஸ்தாபனத்தார் உபசரணையுடன் விசேஷமாகக் குறைக்கப்பட்ட விலை ரூபா. 10,000/-க்கு வழங்குகிறார்கள்.] X



100 ஆறுதல் பரிசுகள் மெஸர்ஸ் மில்லர்ஸ் லிமிட்டெட்டின் உபசரணையுடன் இந்த சீட்டிழுப்பில் 100 ஆறுதல் பரிசுபெற்றவர்களும் தங்கள் பரிசுத் தொகையிலிருந்து, விரும்பினால் விசேஷமாகக் குறைக்கப்பட்ட




## விவசாயிகள் கஷ்டம்

நாரந்தனை, வியாழன்

நாரந்தனை, கரம்பன் வேலணை ஆகிய பகுதிகளில் உப உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகளூ பெருத்த ஏமாற்றத்துக்குள்ளாகியுள்ளனர். கட்டாக்காலி மாடுகளின் அட்டகாசம் தாங்க முடியாது, பயிர்களைப்பாது காப்பதற்கு வழியின்றி முடிவில் கைவிட்டுவிட்டார்கள். அத்துடன் மிளகாய்ச்செடியில் ஒருவித நோய் பற்றிக்கொண்டதும் தண்ணீர் தட்டுப்பாடும் விவசாயிகள் உப உணவு பயிர்ச்செய்கையைக் கைவிட மற்றும் காரணங்களாகும்.

## புதிய நிர்வாகிகள்

சாவகச்சேரி, வியாழன்

யாழ். இலக்கியநண்பர்கழகபுதிய நிர்வாகிகளாகப் பின் வருவருவோர் தெரிவு செய்யப்பட்டனர்,

தலைவர் திரு. ஆ. மகாதேவன்; உபதலைவர் திரு. இராஜேஸ்வரன்; காரியதரிசி திரு. சி. சிவஞானசுந்தரம்; உபகாரியதரிசி திரு. பூ. செல்லத்துரை, பொருளாளர் திரு. வே. தேவதாசன், பத்திரிகை ஆசிரியர் திரு. க. மயில்வாகனம். ஐந்துபேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## எம். பி. யிடம் கோரிக்கை

சுழிபுரம், வியாழன்

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கத்திடம் காரைநகர்ப்பகுதி மக்கள் குடிதண்ணீர் சம்பந்தமாக வேண்டிய வசதிகள் செய்து தருமாறு வேண்டியுள்ளனர். கால் நடைகளும் குடிதண்ணீரின்றிக் கஷ்டப்படுவதாயும் எம். பி. க்குத் தெரிவிக்கப்பட்டது.

## வள்ளுவர் விழா

இமையாணன், வியாழன்


கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினர் வழமை போல் இம் முறையும் திருவள்ளுவர் விழாவை வெகு சிறப்பாக நடத்தமுன் வந்துள்ளனர். கரணவாய் உபதபாற் கந்தோருக்கருகாமையில் உள்ளமைதானத்தில்இம் மாதம்23-ம், 24-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும்இவ்விழாவில் தமிழ்நாட்டறிஞர்களும்கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. வடமராட்சிப் பகுதிப் பாடசாலை மாணவ,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

துகளுக்கள்.] X

## 100 ஆறுதல் பரிசுகள்

மெஸர்ஸ் மில்லர்ஸ் லிமிட்டெட்டின் உபசரணையுடன் இந்த சீட்டிழுப்பில் 100 ஆறுதல் பரிசுபெற்றவர்களும் தங்கள் பரிசுத் தொகையிலிருந்து, விரும்பினுல் விசேஷமாகக் குறைக்கப்பட்ட விலையான ரூ. 250/-க்கும் ஹம்பர் ஸைசிக்கிள் ஒன்றை வாங்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது.



**கடந்த இரண்டு கார் சீட்டிழுப்புகளில் 100 அதிர்ஷ்டப் பரிசு பெற்றவர்கள் தலா ரூ. 1033/60 பரிசு பெற்றுர்கள்.**

X இவைகள் தீர்வை உட்பட வழமையான கம்பெனி பட்டியல் விலைக்குக் குறைந்ததாகும். இந்தக் கார்களையும், ட்ராக்டரையும் வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப் பின்னர் 14 நாள்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

# உங்கள் பழைய லொத்தர் டிக்கெட்டைக் கொண்டு மேலதிக ரொக்கப்பணம் பரிசாகப் பெறுங்கள்.

1. 1967 மே 4 உ நடைபெற்றதும் 11ம் திகதியும் நடைபெறவிருப்பதுமான 140 வது, 141வது இலக்கசுவீப்புகளுக்கு நீங்கள் வாங்கிய டிக்கெட்டுகளுக்கு இந்த லொத்தர்களில் பரிசு கிடைக்காவிட்டால், இந்த டிக்கெட்டுகளின் மறுபுறத்தின் கீழ் கேட்டுள்ளவற்றைத் தெளிவாக எழுதவும்:-
   அ 1967 மே 18ந் திகதி நடைபெறவிருக்கும் 142வது இலக்க லொத்தர் சீட்டிழுப்பில் முதலாவது பரிசைப் பெறக்கூடிய டிக்கெட்டின் எழுத்துக்கு முன் உள்ள இலக்கங்களை முன்கூட்டியே குறிப்பிடுங்கள். உதாரணமாக பரிசு பெறும் இலக்கம் 25A0275 ஆக இருந்தால் நீங்கள் 25 என்பதைக் குறிப்பிட வேண்டும். இந்த இலக்கம் 01க்கும் 60 க்கும் இடையில் எந்த இலக்கமாகவாவது இருக்கலாம்.
   ஆ. உங்கள் பெயரும், விலாசமும்.
2. உங்கள் பிரவேசப்பத்திரத்தை அல்லது பத்திரங்களை கவரில் அடைத்து அதன் இடது பக்க மேல் மூலையில் 'போட்டி' என்று குறிப்பிட்டு, தபால் பெட்டி இலக்கம் 631, கொழும்பு என விலாசமிட்டு 1967 மே 17ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாக கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள்.
3. ஒருகவரினுள் எத்தனை பிரவேசப்பத்திரங்கள் வேண்டுமானுலும் வைத்து அனுப்பலாம். ஆனுல் ஒவ்வொரு மனுவுக்கும் ஒரு டிக்கெட் பாவிக்கப்படவேண்டும்.
4. சரியான விடைகள் அனுப்புவோர்களுக்கு ரூ. 1250/- சமமாகப் பங்கிட்டுகொடுக்கப்படும். 50க்கு மேற்பட்ட சரியான விடைகள் இருக்குமானுல் முதல் 50ஐயும் தெரிந்தெடுத்து அவர்களுக்கு பரிசுத்தொகை ரூ. 1250/- பங்கிட்டு வழங்கப்படும். ஒருவருக்கு ஒருபரிசுக்கு மேல் வழங்கப்படமாட்டாது.
5 நீதிபதிகளின் தீர்ப்பே இறுதியானது. இந்தப் போட்டி சம்பந்தமான எந்தக்கடிதப் போக்குவரத்தும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இந்தப்போட்டியில் பரிசு பெற்ருேர்களின் பெயர்கள் 1967 மே 24ம் திகதிய புதினப்பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும்.

காலையில் உள்ளமைதானத்தில் இம் மாதம் 23-ம், 24-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் தமிழ்நாட்டறிஞர்களும் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. வடமராட்சிப் பகுதிப் பாடசாலை மாணவ, மாணவிகளிடையே பேச்சு, நடன, நாடகப் போட்டிகளும் இவ்விழாவையொட்டி நடத்தப்படவிருக்கிறது.

---

## மாணவர் கஷ்டம

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மேல் வகுப்பு ரசாயனம் கற்கும் மாணவர்கள் ரசாயன பாடம் கற்பிக்கும் ஆசிரியர் இல்லாததினுல் வீண் பொழுது போக்குகின்றனர். கடந்த தவணை இடமாற்றலாகிச் சென்ற ரசாயன ஆசிரியரின் இடத்துக்கு இது வரை எவரும் நியமிக்கப்படவில்லை. இக் கல்லூரியில் விஞ்ஞான பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்கள் தவணைக்குத் தவணை தட்டுப்பாடு ஏற்படுவது ஒரு சாதாரண விஷயம் எனப் பேசிக் கொள்ளப்படுகிறது.

---

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் திருவடிநிலை தமிழ்க் கலவன் பாடசாலை மாணவ மாணவிகளை வைத்திய பரிசோதனைக் குழுவினர் பரிசோதித்து ஒவ்வொரு மாணவருக்கும் விபரம் தெரிவிக்கப்பட்டு, அவ்வப்பகுதி வைத்தியசாலையில் சிகிச்சைபெறுமாறு ஆலோசனை கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### தேவை

வரி அறவிடுபவர்கள் தேவை. சுழிபுரம் கிராம சபைத் தலைவரால் 28-5-67 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பிப்பவர் 18 வயதுக்கு மேற்பட்டவராயும், தமிழில் அழகாக எழுதக் கூடியவராயும் இருக்கவேண்டும். தெரிவுசெய்யப்பட்டபின் ரொக்கப்பிணையாக ரூபா 250 செலுத்தவேண்டும். அறவிடப்பட்ட வரித் தொகைக்கு 12 வீதம் தரகு வழங்கப்படும். இந்தப்பதவி தரகுஅடிப்படையில் இருப்பதால் பகுதிநேர வேலையாகச் செய்வதற்கு எவரும் முன்வரலாம்.

சு. கந்தசுவாமி
தலைவர்
சுழிபுரம் கிராமசபை.

கி. ச. அலுவலகம்,
சுழிபுரம்.
11-5-67. 1780

### ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் 230 A நாவலர் வீதி திரு. தில்லையம்பலம் நவரெத்தினமவர்களின் கடையில் 1-1-66க்கு முன் வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவற்றை 6-6-67 முற்பகல் 9-30 மணி தொடக்கம் கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏல விற்பனவாளர்.
1779

MANOHARA
Jaffna
Daily at 4-45, 7-00, 9-45
Vincent Price
in
**MASQUE OF THE RED DEATH**
(Pathe Colour)

யாழ். உதைபந்தாட்டசங்கப்போட்டி

## அரியாலை, குருநகர் புனிதவளன் வெற்றி பெற்றன

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கழகங்களுக்கிடையேயான 'நொக்கவுட்' சுற்றுப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் குருநகர் பாடும்மீன் கோஷ்டியினரும் கடுமையான ஒரு உதைபந்தாட்ட மோதலில் ஈடுபட்டனர். இப்போட்டி ஆரம்பத்தில் இருந்து முடிவு வரையும் அருமையாக இருந்தது. ஆட்டமுடிவில் அரியாலை வென்றபோதும் பாடும்மீன் கோஷ்டியின் ஆட்டம் அபாரமாகக் காணப்பட்டது. பாடும் மீன் கோஷ்டியின் மின்னல் வெட்டுக்களுடன் கூடிய அருமையான 'பாசிங்' விளையாட்டு அரியாலை வீரர்களைத் திண்டாட வைத்தது. இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் ஒருவருமே கோல்கள் போடவில்லை. இடைவேளைக்குப் பின்னரே அரியாலை முன்னனி வீரர் ஒருவர் ஒரு கோலை மிகவும் சிரமப்பட்டு போட்டார். பாடும்மீன் கோஷ்டி பலதடவைகள் கோல்கள் போட முயன்றது. அந்த முயற்சிகள் அத்தனையும் அரியாலை பின்னனி வீரர்களால் முறியடிக்கப்பட்டன. இப்போட்டி முடிவில் அரியாலை 1—0 கோலால் பாடும் மீன் கோஷ்டியை வென்றது.

### புனித வளன் வெற்றி

குருநகர் புனிதவளன் உதைபந்தாட்டக்கோஷ்டிக்கும், ஜொலி ஸ்ரார் உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற மற்றொரு பலப்பரீட்சையில் புனிதவளன் கோஷ்டியினர் வெற்றியீட்டினர். இப்போட்டியில் இரு கோஷ்டியும் ஆரம்பத்திலிருந்து முடிவு வரையும் நன்ருகஆடின. ஆரம்பத்தில்இரு கோஷ்டியுமே ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுக்காமல் போட்டியிட்ட காரணத்தால் இடைவேளைக்கு முன் ஒருவருமே கோல்கள்போடவில்லை. இடைவேளைக்குப் பின்னரே இரு சாராரும் கோல்கள் போடத்தொடங்கிஞர்கள்.

இரு சாராரினதும் கோல்கள் விளாசும் கட்டங்கள் அருமையாகவிருந்தன. இதஞல் இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற ஆட்டத்திலும்பார்க்க பன்னர் நடைபெற்ற ஆட்டம் விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் காணப்பட்டது. புனிதவளன் கோஷ்டியின் முன்னணிவீரர்களின் சுறுசுறுப்பான 'பாசிங்' விளையாட்டுஅருமையானது. ஜொலி ஸ்ரார் கோஷ்டியினரின் பின்னணி வீரர்கள் அதிர் அடிகள் அற்புதமானது. இப் போட்டி முடிவில் புனிதவளன் கோஷ்டியினர் 3-2 கோல்களால் ஜொலிஸ்ரார் கோஷ்டியினரை வென்றனர். இப் போட்டிகள் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றன.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
ஜெய்சங்கர் - K. R. விஜயா
நடித்த
**பெண்ணே நீ வாழ்க!**

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி—தேவிகா
நடித்த
**பழநி**

REGAL - JAFFNA
Time: 4-45, 7-00 p. m.
James Stewart
Cindy Carol
in
**DEAR BRIGITTE**
இரவு 9-45
சந்திரலேகா


### மண்டலாபிஷேகம

சுழிபுரம், வியாழன்

பொன்ஞலை ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில் மண்டலாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது. பதினைந்து தினங்கள் தொடர்ந்து கும்பாபிஷேகம் நடைபெற்றது.

### இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்

**வெள்ளி 12 - 5 - 67**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**341 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 பண்ணுருந்தமிழ், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை,

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 தொழிலாளர்வேளை.

இரவு 6-15 பஜனை, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 முத்திநெறி — சைவசஞ்சிகை, 7-45 திருமுறைப்பயிற்சி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 [illegible] 10-15 தேர்ந்த இசை.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

முட்டையிடும் பருவம்:
வழக்கமான விலை ரூபா பதினைந்து. அறிமுகப்படுத்து விலை ரூபா பத்து. இச் சலுகை இருபதுநாட்களுக்கு மாத்திரம். அருணு ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 2391

கூவும் சேவல்:
வழக்கமான விலை ரூபா ஆறு — அறிமுகப்படுத்தும் விலை ரூபா நாலு. அருணு ஏஜென்ஸீஸ் அளவெட்டி.

மரம்
300 கனஅடி வேப்பமரம் விற்பனைக்கு உடனடியாக இருக்கிறது. லொறி மூலமாகவோ' றயில் மூலமாகவோ ஏற்றித் தரப்படும். நேரில் பார்த்து விலைகோரவும். என். கே. சோமசுந்தரம், கல்கமுவா (Galgamuva.) 1994

தோட்டம்
பளையில் 12 1/2 ஏக்கர் தோட்டம் விற்பனைக்கு உண்டு. தென்னம்பிள்ளை, மாங்கன்று வைக்கச் சிறந்த மணல். முகமாலை V. C. ஒழுங்கையும், ஆனைவிழுந்தான் ஒழுங்கையும் சந்திக்கும் இடத்தில் உள்ளது. விபரங்களுக்கு விளம்பர இல. 2000, ஈழநாடு மே/பா த. பெ. எண் 49, யாழ்ப்பாணம் என்றவிலாசத்துக்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 2000

காணி
நாவற்குளியில் கண்டி ரோட்டருகில் புகையிரதஸ்தானத்துக்கு அண்மையில் வீடு கட்டுவதற்கு வசதியான 30 பரப்புக் காணி மொத்தமாகவேனும் துண்டுகளாகவேனும் விற்கப்படும். விபரத்துக்கு கா. பீதாம்பரம், 'மலரகம்' மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. 1998

### தேவை

ஆசிரியர்
வெளியூர் பங்களாவில்6-ம் வகுப்புவரை குழந்தைகளைப் படிப்பிப்பதற்கு S. S. C, தராதரப்பத்திரம் உடைய ஆசிரியர் தேவை. கேத்திர, அட்சரகணித அறிவு முக்கியம். சங்கீத அறிவு இருந்தால் விரும்பத்தக்கது. நேரில் உடனே வரவும். 28, யாழ்வீதி, யாழ்ப்பாணம். 1995

மாற்றம்
வூல்பன்டோல் மகளிர் பாடசாலையில் கடமையாற்றும் தமிழ் தராதரப்பயிற்சி பெற்ற ஆசிரியை, அதே நிலையில் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் ஆசிரியையுடன் இடமாற்றம்செய்ய விரும்புகிருர். கீழே கொடுக்கப்பட்ட விலாசத்திற்குத் தொடர்புகொள்ளவும். திருமதி ப. பாலசுப்பிரமணியம், ஆசிரியை, வூல்பன்டோல் மகளிர் பாடசாலை [Wolfendhal Girls School], கொழும்பு - 13. 1997

### தேவை

பங்காளர்
'தமிழரசி' வார ஏட்டிற்கு 1000 ரூபா முதலீடு செய்யக்கூடியபங்காளர் தேவை. உடனே தொடர்புகொள்ளவும்: அதிபர், 'தமிழரசி' இல. 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 1801

நெசவாளர்கள்
நெசவுவேலை செய்வதற்கு நன்கு அனுபவம்பெற்ற ஆண்களும், பெண்களும் தேவை. நேரில் சமூகம் தரவும். ராஜன்ஸ் கைத்தறி நிலையம், புதுச் செம்மணி வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். 1803

பண்டகசாலை மனேஜராக கடமையாற்றுவதற்கு கூட்டுறவுக் கலாசாலைத் தராதரப் பத்திரமுடையவர் விண்ணப்பிக்கவும். பிணைப் பணம் ரொக்கம் ரூபா 500/- வேதனம் பணியாளர் ஒருவர் உட்பட ரூபா 175/- வயது, முன் அனுபவம், நற்சான்றிதழ்களின் பிரதிகளுடன் மனுப்பண்ணவும். எஸ். எஸ். சர்மா தலைவர் திருக்கோணமலை மத்திய ப. நோ. கூ. சங்கம், 75, கஸ்கிசன்வீதி, திருக்கோணமலை. 10-5-67 1804

கைத்தறிகளில் வேலை செய்வதற்கு நன்கு பயிற்சி பெற்ற பிள்ளைகள் தேவை. பஸ், ரெயில் வசதியும், விடுதி வசதியும் உண்டு. நேர்முகப்பரீட்சைக்கு 14-5-67 / 15-5-67 காலை 9 மணிக்கும் பிற்பகல் 4மணிக்கும் இடையில் மாவிட்டபுரம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு அருகாமையிலுள்ள பிருக் பிரதர்ஸ் (PRAG BROTHERS) நெவு ஆலைக்கு சமூகமளிக்கவும். 1805


இரண்டாவது வெற்றி வாரம

| | | |
|---|---|---|
| கெப்பிட்டல் [கொட்டாஞ்சேனை] | பிளாஸா [வெள்ளவத்தை] | விஜயா [மட்டுநகர்] |
| ஸ்ரீகிருஷ்ணு [திருமலை] | நவா [கொம்பனித்தெரு] | மொடேர்ன் [பண்டாரவளை] |
| விஜிதா [ஹட்டன்] | வெலிங்டன் [யாழ்ப்பாணம்] | தீவொளி [நுவரெலியா] |

தென்னகமெங்கும் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்.

ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
ரங்கராவ் - நாகேஷ்
ஆர். சரஸ்வதி,
மனோகர்,
சீதாலட்சுமி,
மாதவி,
கள்ளபாட்
நடராஜன்
திறம்பட நடித்து
தென்னகமெங்கும்
100 நாட்களுக்கு
மேல் ஓடிய
வெற்றிச் சித்திரம்.



ஈ. வி. ஆர். பிக்சர்ஸ்
**குமரிப் பெண்**
இசை: எம். எஸ். விஸ்வநாதன்
டைரக்ஷன் ராமண்ணு



அரஸ்கோ
"மயில்" மார்க்
கற்பூரத்தையே வாங்குங்கள்




கொஞ்சமும் கலப்பின்றி சுத்தமான
விளைவு கற்பூரத்தில் தயாரிக்கப்பட்டது.
1/4 இரு., 1/2 இரு., 3/4 இரு. ஆகிய
மூன்று அளவு பெட்டிகளில் தயாரிக்கப்படுகின்றன.
எங்கும் கிடைக்கும்.
"மயில்" மார்க் கற்பூரம் என்றே
கேட்டு வாங்குங்கள்.
தயாரிப்பாளர்:
அரஸ்கோ கற்பூரத் தொழிற்சாலை
பருத்தித்துறை வீதி நல்லூர், யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 7051


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "புதையலில் இருவிக்கிரகங்களைத்தவிர மற்றெல்லாம் எமக்கே என்றார்"

## கார்த்திகைக்காய் கொலை வழக்கில் சாட்சி

காங்கேசன்துறை, வியா.

"ஆயுள் வேதமுறைப்படி கார்த்திகைக் காய்களை எதற்கும் பாவிப்பதில்லை. அது நச்சுத் தன்மையுடையபடியால் அவை எடுத்துக் கொள்ளப் படுவதில்லை" என்று பிலவத்தை முக்கொலை வழக்கில் சாட்சியமளித்த காரைநகரைச் சேர்ந்தவைத்தியரான சுப்பிரமணியம் இராஜசேகரம் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை 'கார்த்திகைக் காய்' முக்கொலை வழக்கு நேற்று மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் தொடர்ந்து விசாரணைக்குஎடுத்துக் கொள்ளப்பட்டபோது, வட்டுக் கோட்டை கிழக்கைச் சேர்ந்தவர்களான சரஸ்பதி தியாகராசா [மந்திரவாதி], இராமசாமி காசிப் பிள்ளை [இறந்த பிள்ளைகளின் தந்தை] ஆகிய இருவரும் சென்ற வருடம் நவம்பர் மாதம் 28-ம் திகதி காசிப் பிள்ளையின் பிள்ளைகளான பாக்கியலட்சுமி [வயது5], இராசேந்திரம் [வயது 8], வைரவநாதன் [வயது 3] ஆகிய மூவரையும் நஞ்சூட்டிக் கொலை செய்ததாகவும் அதே நேரத்தில் காசிப்பிள்ளையின் மனைவி விசாலாட்சி மகள் சரோஜினி [வயது13] ஆகிய இருவரையும் நஞ்சூட்டிக் கொலை செய்ய முயன்றதாகவும் சங்கானைப் பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.

இராஜசேகரம் தமதுசாட்சியத்தில் கூறியதாவது:-

சம்பவதினம் இரவு 11மணியளவில் விசாலாட்சியின் தந்தை கார்த்திகேசு கந்தையா எனது வீட்டிற்கு வந்து தனது பேரப்பிள்ளைகளுக்கு வாந்தியும், கழிச்சலுமாக இருப்பதாகக் கூறி என்னை அழைத்துச் சென்றார். நான் போய் பிள்ளைகளைப் பரிசோதித்த பொழுது பிள்ளைகள் வாந்தி எடுத்துக் கொண்டிருந்தார்கள். வயிற்றோட்டமுமிருந்தது. சாப்பாட்டு வித்தியாசத்தால் வந்த சுகவீனமென்று நான் சொன்னேன். நான் மருந்தும் கொடுத்தேன். வேறு மருந்திற்கு எழுதிக்கொடுக்கவில்லை. பிள்ளைகள் என்ன சாப்பிட்டார்களென்று ஒருவரும் கூறவில்லை.

நான் கார்த்திகைக்காயைக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் பார்த்ததில்லை. கார்த்திகைக்காய் கொடியை மட்டும் எனக்குத் தெரியும். ஆயுள்வேத முறையில் கார்த்திகைக் காய்களை எதற்கும் பாவிப்பதில்லை. அது நச்சுத்தன்மையுள்ளதால் மருந்துக்குச் சேர்த்துக் கொள்வதில்லை. நான் ஒருபோதும் பாவிக்காதபடியால் அதன் தன்மையைக் கூறமுடியாது. காத்தோட்டிக் காயையும், கொடியையும் பாவிப்பது எனக்குத் தெரியும். காத்தோட்டிக்காய் கிருமிகளுக்கு நல்லது.

ஆயுள்வேத டாக்டர் வேலாயுதம்பிள்ளை பாம்புக்கடிக்கு கார்த்திகைக் காய் பாவிக்கலாம் என்று சொன்னதை நான் மறுக்கிறேன். நான் படித்துப் பட்டம் பெற்ற ஆயுள்வேத டாக்டர் அல்ல பரம்பரை பரம்பரையாக இத்தொழில் வந்தது.

வட்டுகோட்டையைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை கந்தசாமி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

நான் மேசன் வேலை செய்கிறேன், நான் இரண்டாவது எதிரி இராமசாமிப் பிள்ளையின் வீட்டிற்கு 30 யாருக்கப்பால் இருக்கிறேன். இரண்டாவது எதிரியின் மனைவி விசாலாட்சியை எனக்கு அவர் விவாகம் செய்த நாள் தொடக்கம் தெரியும். 2-வது எதிரியும் மனைவியும் 4 வருடங்களுக்குமுன் சந்தோஷமாக வாழ்ந்துவந்தார்கள். 4 வருடங்களுக்குப் பின் அவர்கள் இருவரும் அவ்வளவு சந்தோஷமாக இல்லை இரண்டாவது எதிரி காசிப்பிள்ளை நாலைந்து தொழிலாளர்களை வைத்து வேலை செய்கின்றவர். நான் விவாகமானவன். 1963-ம் ஆண்டு எனக்கு வயிற்றில் ஒருவித வலி இருந்தது. முதலாவது எதிரி மை போட்டுப் பார்த்து மந்திரத்தால் சுகப்படுத்துவதாகச் சொல்லிச் சிகிச்சை செய்தார். இந்த வேளையில் எனக்கு வலி அதிகரித்தது. அதன் பின் எனக்கு இரைப்பை அழுகி கொழும்பு பெரியாஸ்பத்திரியில் ஆப்பரேஷன் செய்யப்பட்டது.

1963-ம் ஆண்டு ஆப்பரேஷன் செய்த பின்பு 1-ம் எதிரி என்னையும் வேறு மூவரையும் புதையல் எடுப்பதற்காக தொல்புரம் பூதாசாரி அம்மன் கோவில் பின்வீதியிலுள்ள கிடங்கிற்கு அழைத்துச் சென்று கற்பூரம் கொளுத்தி கிடங்கில் போட்டு செபம் செய்து கொண்டு திரிந்தார். இ சம்பவம் இரவு 10 மணிக்குப் பின்னரே நடைபெற்றது. இப்படி ஒரு வருடமாக நடைபெற்றது. தினமும் அந்தக் கோவில் கிடங்கில் முதல் இரண்டு தங்கச் சிலை வரும் என்றும் அதை தான் எடுப்பதாகவும், பின்னர் வருவது எல்லாம் எங்களுக்கு என்றும் சொன்னார். இதை நம்பி எனது குடும்பத்திலுள்ள நகைகளை எல்லாம் 1500 ரூபாவிற்கு விற்றுச் செலவிட்டேன். இரண்டு சின்ன தங்கச்சிலை கிடைத்த பின் மற்றவை வரும் என்று சொல்லி எங்களை ஏமாற்றினார். ஒரு நாள் முல்லைத்தீவுக்குப் போகவேண்டும் என்றும், ஒரு நாள் பூநகரிக்குப் போகவேண்டும் என்றும், மாடு வாங்கவேண்டும், கார்க்காசு வேண்டும் என்றும் இப்படியெல்லாம்சில்லறைசில்லறையாக எமது பணத்தை புதையல் எடுப்பதற்காக கொடுத்தோம். பின்பு மந்திரவாதி செய்கிறதெல்லாம் பொய் என்று எண்ணி நானும், சீனிவாசகமும், கனகசபையும் இவரை விட்டு விலகினோம். இதன்பின்பு அவர் எங்களைக் கண்டால் பயமுறுத்தும் வகையில் பார்ப்பார். கத்தி, வாள் முதலிய ஆயுதம் கொண்டுஇவர் செல்வார். ஒருமுறை இவர் எங்களுடன் சண்டைக்கும்வந்தார்.

1ம் எதிரி மானிப்பாயிலும் இருந்தார். நானும் அவருடன் இருந்திருக்கிறேன். அயலில் உள்ளவர்களெல்லாம் சிறிது காலம் எங்களுக்குப்பயந்து மாலை6மணிக்கே விளக்கை அணைத்து விட்டுப்படுத்துவிடுவார்கள். இரண்டாம் எதிரியான இறந்த குழந்தைகளின் தந்தையான இராமசாமி காசிப்பிள்ளை அந்த நாட்களில் முதலாம் எதிரியான மந்திரவாதியுடன் சேர்வதில்லை. எங்களை இரண்டாம் எதிரி திருத்தியிருக்கிறார். சீனிராசா, சோமசுந்தரம் ஆகியோருக்கு முதலாம் எதிரி அடித்துள்ளார். சோமசுந்தரத்திற்கு வாளால் வெட்டியுமுள்ளார். நான் முதலாவது ஒப்பரேஷனால் வந்த பின்பே இவர்கள் அடிபட்டனர். இதன் பின்பே முதலாவது எதிரியும், இரண்டாவது எதிரியும் சேர்ந்தனர். அப்போது இரண்டாம் எதிரியின்மனைவி விசாலாட்சிஎன்னிடம் 'நீங்கள் தப்பிவிட்டீர்கள், எனது கணவன் இப்போது அகப்பட்டுக்கொண்டார்' என்று கூறினார். முதலாம் எதிரி ஒரு தடவை தனது தலையில்தானே மண்ணெண்ணையை ஊற்றித் தீ மூட்டியுள்ளார். அவர் தலையில் இப்போதும் அக்காயம் உண்டு.

விசாரணையைப்பார்ப்பதற்கு நேற்று மல்லாகம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர்.

மேல்விசாரணை இம்மாதம் 20ம்திகதிக்குப் பின்போடப்பட்டது.

### கலைப் போட்டிகள்

சுழிபுரம், வியாழன்

வட்டுக்கோட்டைக் கலைக் கழகத்தினர் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி கலைப் போட்டிகளை நடாத்த ஏற்பாடுகள் செய்துள்ளனர்.


# இலாபகரமான கோழிப் பண்ணை

யாழ்ப்பாணம் வை. எம். சீ. ஏ. மண்டபத்தில்
மெசேர்ஸ். எவ். அன்ட் ஜீ. சைக்ஸ்
லிமிட்டெட் [லண்டன்] ஸ்தாபனத்தாரின்
பிரதம ஆலோசகர்

**டேவிட் வாட்டமன் அவர்கள்**

**"இலாபகரமான கோழிப்பண்ணை"**

என்னும் பொருள்பற்றி 1967-ம் ஆண்டு மே மாதம் 15-ம் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு ஓர் விரிவுரை நிகழ்த்துவார்கள்.

**விரிவுரையின் பின்னர் ஒரு படக்காட்சி இடம்பெறும்**

அழைப்பிதழ்மூலமாகவே பொதுமக்கள் அனுமதிக்கப்படுவர். விபரங்களுக்கு எங்களுடனேனும், அல்லது உங்கள் பகுதி அரசாங்க கால்நடை வைத்தியருடனேனும், அல்லது கிருஷிக போதனையாளருடனேனும் தொடர்பு கொள்ளவும்.

சிலோன் ரிறேட் எக்சேஞ், Ceylon Trade Exchange,
சைக்ஸ் பிரான்சைஸ் ஏஜண்டுகள், Franchise Agents for Sykes,
51/6, மேர்க்கண்டைல்ஹவுஸ், 51/6, Mercantiel House,
குவீன் வீதி, Queen Street,
கொழும்பு - 1. Colombo - 1.
தொலைபேசி: 5521 Tel: 5521.


வடபகுதி அசைஸ்

# "பொன்னாலை பெண்கள் கைது செய்யப்படவில்லை"

## மூளாய் கொலைவழக்கில் இன்ஸ்பெக்டர் சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மூளாய் கொலை வழக்கு நேற்றுக்காலை ஒன்பதாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது. இன்ஸ்பெக்டர் ஏ. இராசையா சாட்சியமளித்தார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் வி. தென்னக்கோன் முன்னிலையில் விசாரணை செய்யப்படுகிறது, விசாரணையைப் பார்ப்பதற்காக பாடசாலை மாணவிகள் உட்பட ஏராளமானோர் கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் திரண்டிருந்தனர். இவ்வழக்கில் 66-ம் ஆண்டு மே மாதம் 18-ம் திகதி மூளாயில் சுப்பர் முருகேசுவை, சுப்பன் கணபதியும், கணபதி தெய்வேந்திரனும் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அட்வக்கேட் இரகுபதியால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது இன்ஸ்பெக்டர் இராசையா கூறியதாவது- இக்கொலைச் சம்பவம்பற்றி முதன்முதல் முருகேசு செல்லம் தகவல் கொடுத்தார். இறந்தவர் வீட்டுத் தலைவாசல் கூரை இப்ப இருப்பதுபோல்தான் அன்றும் இருந்தது. வழக்கமாக, இரண்டுவருடத்துக்கு ஒரு தடவை வீட்டுக்கூரை வேயப்படும். தலைவாசலிலிருந்து 25 அடி தூரத்துக்கு வெளிச்சம் பரவியிருந்தது. எத்தனை முருங்கை மரங்கள் வெட்டப்பட்டிருந்ததென்று எனக்கு ஞாபகமில்லை.

வழ: பொன்னாலை பெண்கள் கைதுசெய்யப்பட்டு சங்கானைப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுவரப்பட்டார்களா? — பெண்கள் கைதாகப்படவில்லை,

வழ: பொன்னாலைப் பெண்கள் விசாரணை செய்யப்பட்டார்களா? —எனக்கு ஞாபகமில்லை.

விசாரணை இன்றுகாலை தொடர்ந்து நடைபெறும்.

### "மாவட்டசபை மசோதா . . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி

வேன். இதன் பின்னரே மாவட்டசபைகள் மசோதா பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படும்" என்றும் பிரதமர் டட்லி தெரிவித்தார்.

# தலைவர்களின் பேச்சு துரதிர்ஷ்டமானது

"மாவட்டசபைகள்சம்பந்தமாக எதுவும் வெளியே கூற வேண்டாமென்றும் வீண் பிரச்னைகளைக் கிளப்ப இடமளிக்க வேண்டாமென்றும் தமிழரசுக்கட்சியினரை நான் கேட்டிருந்தேன். ஆனால் சமீபத்தில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் உட்பட தமிழரசுக் கட்சித் தலைவர்கள் சிலர்பேசியதாக வெளிவந்த செய்திகள் துரதிர்ஷ்டமானதாகும்." என்று பிரதமர் டட்லி கூறினார்.

### நகல் மசோதா

இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் மசோதாபற்றி பிரதமர் தெரிவிக்கையில், பார்லிமெண்டின் இப்போதைய கூட்டத்தொடர் முடிவடைவதற்குள் அதை நிறைவேற்றிவிடத் தாம் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதாகவும் ஆனால்எதிர்க்கட்சியினர் இதற்கு இடையூறு செய்வதாகவும் தெரிவித்தார்.

# வாழ்ந்தால் அவளோடுதான் வாழ்வேன் என்றாராம்

## தந்தை எதிர்த்ததால் வாலிபர் தற்கொலை

பலாலி, வியாழன்

காதலுக்கு எதிர்ப்பு ஏற்பட்டதால் 18வயது வாலிபர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இழவாலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் பரராசசிங்கம் என்பவரே இந்தப் பரிதாபத்துக்குள்ளானவர். நெசவாலையொன்றைச் சேர்ந்த ஒரு பெண்ணோடு இவர் காதல் கொண்டிருப்பதாகவும், இக்காதலை தகப்பன் ஆட்சேபித்ததால் வாழ்ந்தால் அவளோடுதான் வாழ்வேன் என்று கூறிக்கொண்டிருந்ததாகவும், நேற்று நிலைமை முற்றியதனால் அவர் சாப்பிடாமலிருந்ததாகவும் அதன்பிறகு நச்சுத்திராவகம் அருந்தியதாகவும் மரணவிசாரணையின் போது தெரியவந்தது.

இச்சம்பவம்குறித்து காங்கேசன்துறை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஏ. குமரகுரு விசாரணை நடத்தினார். காலஞ் சென்றவரின் தந்தையான சின்னத்தம்பி சுப்பிரமணியம் தாயார் பொன்னம்மா பிரேதபரிசோதனை நடத்திய டாக்டர் குலசிங்கம் ஆகியவர்கள் சாட்சியமளித்தனர்.

தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

### தேசியசுவீப்...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 34 | U | 0030 | 16 | X | 0562 |
| 15 | P | 0824 | 14 | O | 0814 |
| 10 | W | 0756 | 35 | Q | 0648 |
| 29 | W | 0003 | 11 | P | 0871 |
| 07 | T | 0440 | 26 | D | 0901 |
| 06 | U | 0287 | 18 | O | 0145 |
| 34 | J | 0376 | 22 | Y | 0174 |
| 27 | C | 0646 | 06 | G | 0346 |
| 11 | X | 0636 | 10 | G | 0993 |
| 04 | S | 0962 | 13 | G | 0519 |
| 35 | C | 0389 | 26 | N | 0563 |
| 33 | Y | 0235 | 24 | Y | 0382 |
| 11 | O | 0641 | 31 | V | 0246 |
| 10 | O | 0353 | 24 | Z | 0285 |
| 17 | Q | 0660 | 29 | J | 0445 |
| 32 | D | 0610 | 27 | M | 0930 |
| 28 | M | 0293 | 14 | K | 0514 |
| 16 | X | 0908 | 22 | T | 0109 |
| 22 | J | 0122 | 15 | D | 0839 |
| 12 | S | 0574 | 28 | T | 0796 |
| 16 | X | 0561 | 30 | L | 0424 |
| 31 | V | 0291 | 21 | B | 0688 |
| 29 | P | 0162 | 13 | Z | 0602 |
| 12 | C | 0711 | 29 | B | 0915 |
| 06 | F | 0689 | 26 | L | 0883 |
| 06 | R | 0332 | 31 | S | 0939 |

[இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை.]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு மே மாதம் 12-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org